பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 21 திங்கட்கிழமை (08.10.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 312

## நாளை மறுதினம் உத்தேச மதிப்பீட்டு அறிக்கை

# பாதுகாப்புச் செலவு அடுத்த வருடத்தில் 20 சத வீதம் உயர்கிறது!

## போரைத் தீவிரமாக்கத் திட்டம்

கொழும்பு,ஒக்ரோபர் 8

அடுத்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவினம் 20 சதவீதம் உயர்கிறது. போரைத் தீவிரப்படுத்துவதற்கான அறிகுறி இதுவாகும். இப்போது அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் போரை மேலும் தமது தரப்பில் வலுப்படுத்துவதற்காகவே அரசு தனது பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதுகாப்புச் செலவினத்துக்கு அதிகரிக்கப்பட்டுள்ள தொகை முப்படைகளுக்கும் பொலிஸாருக்கும் அதிக அளவில் ஆயுதத் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்புச் செலவு 139.4 பில்லியன் ரூபாவாகும். அடுத்த வருடத்துக்கான உத்தேச ஒதுக்கீடு 166.4 பில்லியன் ரூபாவாகும்.

அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான உத்தேச வரவு - செலவு மதிப்பீட்டு அறிக்கையை நாளை மறுதினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது.

அரசாங்கத்தின் அடுத்த வருடத்துக்கான மொத்தச் செலவு இந்த ஆண்டைவிட 15 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

செலவினம் அதிகரிக்க உள்ளதால் துண்டுவிழும் தொகை முன்னரைவிட கூடுதலாகும் என்றும் அதன் காரணமாக வரிவிதிப்புகள் அதிகமாக இருக்கும் என்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் விமானங்கள் மீண்டும் பறந்தனவா?

கொழும்பு,ஒக்.8

அனுராதபுரம் அருகே தந்திரிமலைப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வானில் பறந்தனவா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அனுராதபுரத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் என அனுராதபுரம் பொலிஸ் அதிகாரி எம்.பெரேரா தெரிவித்துள்ளார்.

தந்திரிமலைப் பகுதியில் புலிகளின் விமானங்கள் பறந்தன என்று வெளியான

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதத்தடை முடிவை நீக்குவதற்கு அமெரிக்க மூதவை மறுத்துவிட்டது!

### போகொல்லாகமவின் முயற்சி தோல்வி

கொழும்பு,ஒக்.8

இலங்கைக்கான ஆயுத உதவிகளை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்காவின் மூதவையினால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மீளப் பெறப்படவேண்டும் என்று இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை செனட்சபை நிராகரித்துள்ளது.

கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அமெரிக்க மூதவையின் (செனெற்றின்) உறுப்பினர்களைச் சந்தித்து இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித

(08ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆயுத உதவி செக். குடியரசு இணக்கம்

புதுடில்லி,ஒக்.8

செக்கோசிலோவாக்கியா இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை வழங்க இணங்கிருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

அதிநவீன ராடர் சாதனக் கருவிகளுடன் பல இராணுவத் தளபாடங்களை இலங்கை அரசுக்கு தமது அரசு வழங்க முன்வந்துள்ளதாக இலங்கைக்கான செக்கோசிலோவாக்கியா குடியரசின் தூதர் கைடைக் கிமோனிக் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வைத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்தபோது, இந்த விடயம் தொடர்பாக அவரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் செக்குடியரசுத் தூதர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

''நாம் தயாரிக்கும் ராடர் சாதனங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அதி உயரத்தில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டித் தீர்வுக்கு ஐ.தே.க. இணங்கவே இல்லை; ஆராய்ந்து பார்க்க மட்டுமே ஒப்புக்கொண்டோம்

### விளக்குகிறார் கிரியெல்ல எம்.பி.

கொழும்பு,ஒக்.8

''இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையில் தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதுமே இணங்கியதில்லை. விடுதலைப் புலிகள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டு, இறங்கி வந்ததால் - அவர்களைத் தொடர்ந்தும் பேச்சு மேசையில் வைத்திருப்பதற்காக - சமஷ்டி பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு இணங்கினோமே தவிர அதனை நாங்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

''எமது கட்சி சமஷ்டி அடிப்படையில் தீர்வு காணச் சம்மதித்தது என்று கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை. அது திரிக்கப்பட்ட பொய்.''

- இப்படி விளக்கம் அளித்திருக்கின்றார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல.

இதுதொடர்பாக உதயனுக்கு அளித்த விசேட செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அதிகாரப்பகிர்வின் ஊடாகவே தீர்வு என்று ஐ.தே.கட்சி கூறியதே தவிர, சமஷ்டி ஊடாகத் தீர்வு என்று ஒருபோதும் சொல்லவில்லை. அதேவேளை, ஐ.தே.கட்சி நாடு இரண்டாகப் பிரியும் வகையில் கூடுதலான

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கைக் கைப்பற்றப் படையினருக்கு இன்னும் 3 அல்லது 4 வருடங்கள் செல்லும்

### ஆங்கில வார இதழின் கணிப்பு இது

கொழும்பு,ஒக்.8

வடக்கில் மேற்கொள்ளப்படும் படை நடவடிக்கைகள் ஆமைவேகத்தில் நடைபெறுகின்றன. இந்த வேகத்தில் சென்றால் படையினர் தமது இலக்கை எய்தி வெற்றி பெறுவதற்கு 3 தொடக்கம் நான்கு வருடங்கள் செல்லும். இது விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

கொழும்பில் இருந்து வெளியாகும் 'த நேசன்' ஆங்கில வார ஏட்டின் பாதுகாப்பு பத்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு-

முகமாலையில் கடந்த வாரம் தாக்குதல்கள் பல நடைபெற்றுள்ளன. ஆனால், படை அதிகாரிகளின் பேச்சுகள் சலிப்பைத் தருகின்றன. இதனால், படையினர் பெற்ற நன்மை என்ன? விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகளை அழிப்பதுதான் படையினரின் த்றபோதைய உத்திகள். ஆனால், வன்னியிலும், வடக்கிலும் படையினர் பலத்த இழப்புக்களை சந்தித்து வருகின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஆழ்கடலில் புலிகளின் ஆயுதக்கப்பலை மூழ்கடித்ததாகக் கடற்படை அறிவிப்பு

கொழும்பு,ஒக.8

மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பல் என்று தெரிவித்து கடற்படையினர் வெளியிட்ட படம் இது.



இலங்கையின் தென்கிழக்கே சர்வதேசக் கடல் எல்லையின் ஆழ்கடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றைத் தாங்கள் தாக்கி மூழ்கடித்திருக்கின்றனர் என்று இலங்கைக் கடற் படையினர் அறிவித்திருக்கின்றனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கு ஆயு தங்களை ஏற்றிக்கொண்டுவந்த இந்தக் கப்பலை அவதானித்த கடற்படையினர் அதனைத் துரத்திச் சென்று தாக்கி மூழ்கடித்தனர் என்று கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்கா தெரிவித்தார். (08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் சிறைக் கைதிகளுடன் ஐ.நா. அதிகாரி நேற்று சந்திப்பு

### நிலைமையைக் கூறமுடியவில்லை எனக் கைதிகள் ஆதங்கம்

கொழும்பு,ஒக்.8

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையின் (சீ.ஆர்.பி) தடுப்புக்காவல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை நேற்று சர்வதேச நாடுகளில் இடம்பெறக்கூடிய சித்திரவதைகள் தொடர்பான விடயங்களைக் கண்காணிக்கும் ஐ.நா.வின் விசேட இணைப்பாளர் மேன்பிரட் நொவக் தலைமையிலான குழுவினர் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் சுமார் 4.40 மணியளவில் மேன்பிரட் நொவக், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 86 கைதிகளையும் பார்வையிட்டதுடன், ஒரு அரசியல் கைதியுடன்

(08ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையிலிருந்து 2007 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்று திறமையாகச் சித்தியடைந்த மாணவி



**செல்வி மு.விபூசனா**

அவர்களைப் மனதாரப் பாராட்டுவதோடு மேலும் கல்வியில் ஊக்கத்துடன் கற்று முன்னேற வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை,
கோப்பாய். (56659)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 155 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி



**செல்வி சதுஷ்டிகா சுபேந்திரன்**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களைக் கற்பித்து வழிநடத்திய அதிபர், ஆசிரியர்கள், மதிப்புக்குரிய அன்பழகன் ஆசிரியர் அவர்களையும், அவருடன் இணைந்த ஆசிரியர்களையும் பாராட்டுவதில் மனம் மகிழ்வு அடைகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
பெரியப்பா (பிரான்ஸ்),
பெரியம்மா (பிரான்ஸ்),
மாமன்மார் (பிரான்ஸ்).
(66372)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2007 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
*யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலய மாணவனும்*
*அமிர்தலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனுமாகிய*



**அ.ஜெயசுதன்**

அவர்களை மென்மேலும் கல்வியில் சிறப்படைய மனமார வாழ்த்துகின்றோம். மேலும் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*வாழ்த்துவோர்:-*
அப்பா, அம்மா, அம்மப்பா, மாமாமார்:- கிருபா (லண்டன்), ஜெயா, மோகன்(கனடா), கமலன் (லண்டன்), கரா (பிரான்ஸ்), ஜீவா, அத்தை - தர்சா (லண்டன்) மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

கே.கே.துரைராசா,
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (66600)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்


யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி 2007 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களான,

| | |
|---|---|
| சிவானந்தன் சாரங்கன் | - 171 |
| பவளகுமாரன் கோபிதா | - 157 |
| கோபாலகிருஷ்ணன் பானுஜா | - 155 |
| தங்கராசா சங்கீத் | - 146 |
| சிவதுரை தருசாலினி | 143 |
| இரவீந்திரன் சுகர்ஜினி | 130 |
| அருளானந்தம் கிஷானி | - 125 |
| மதிசிங்கம் பவதாரணி | - 115 |
| அமிர்தலிங்கம் கஜானன் | - 113 |
| தனபாலசிங்கம் துளசிராம் | - 108 |
| கிருஷ்ணபகவான் பவபிரசாந்தி | - 102 |

ஆகியோரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன் இம்மாணவர்களை அர்ப்பணிப்புடன் பயிற்றுவித்த தரம்-5 வகுப்பாசிரியர் செல்வி மதிவதனி சேனாதிராசா அவர்களையும், பாடசாலை அதிபர், உபஅதிபர், ஆரம்பபிரிவு மேற்பார்வையாளர், உதவிய ஆசிரியர்கள், தென்மராட்சிக் கல்வி வலயம் ஆகியோரையும் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்சங்கம்,
யா/ கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.
(66583)

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**நாகமுத்து சின்னம்மா**

தோற்றம் 01.07.1920
மறைவு 30.09.2005

*பாசமிகு அம்மாவே!*
*மலர்ந்த உம் முகம் காண மனமுருகி கதறுகிறோம்*
*மங்காத அன்பு கொண்டு*
*மகத்தான பண்பு கொண்டு*
*மாறாத அமைதியோடு*
*வாழ்ந்திட்ட எம் தாயே*
*தாங்காத சோகமொன்றை*
*எம்மிடம் ஏன் தந்து சென்றீர்*

*இ.ரவீந்திரன்*
குடும்பத்தினர்.
கட்டுடை, மானிப்பாய். (66674)

## தரம் 06/2008
## புதிய அனுமதிகள்

★ ENGLISH MEDIUM
★ தமிழ் மொழி மூலம்

இரு பிரிவுகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தரம் 05 வரை உள்ள நிறுவனங்களில் பயின்றவர்களுக்கு O/L வரை தடையின்றி கற்பதற்கு ஓர் அரிய வாய்ப்பு.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவங்களை நேரில் அல்லது தபாலில் இந்த மாதம் 15ம் திகதிக்கு முன் ஒப்படைக்கவும். - அதிபர்

**The Express Institute**
Irupalai, Kopay.
(4/53908)

## மரண அறிவித்தல்கள்

### *மார்க்கண்டு செல்வராசா (வவி)*



நாவாந்துறை, கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு செல்வராசா நேற்று (07.10.2007) காலமானார்.

அன்னார் மார்க்கண்டு-ராசாத்தி தம்பதியினரின் புதல்வனும் புஸ்பராணியின்(பரா) அன்புக் கணவரும், ஜெனிற்றா (ஜெனி), கனிஸ்ரா, அருணா, நிஷேத்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை-கண்மணி தம்பதியினரின் மருமகனும், நாமேஸ்வரி (தேவா), கனகம்மா (பேபி), காலஞ்சென்ற பூராசா(திசை), பாலையா(கிளி), சிங்கராசா(சிங்கம்), சரஸ்வதி(கனி), சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பராசா(புஸ்பா), சிவராசா(சிறி), யோகராசா, ஜெயராணி (ஜெயா), காலஞ்சென்ற புவிராசா(புவி), வசந்தராணி, ரூபராசா (ரூபன்), றபேந்திரன்(ரவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார், அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2007) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொட்டடி,*
*நாவாந்துறை.* (66682)
தகவல்:
குடும்பத்தினர்.

### *திருமதி நல்லம்மா பொன்னுத்துரை*



பிரசாத் வீதி, நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி நல்லம்மா பொன்னுத்துரை (நல்லு அக்கா) 07.10.2007 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரச எழுதுவினைஞர் ஜசக் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், வண. பிதா யோசுவா சூரியகுமார் (அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை, நுணாவில்), அல்பேட் ராஜ்குமார் (மஸ்க்கன்ஸ் நிறுவனம் இரத்மலானை), திருமதி நளினி கொல்வின் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி லீலா சூரியகுமார், திருமதி ஏஞ்சலீனா ராஜ்குமார், திருமதி கொல்வின் ஞானமுத்து (தொழில்நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், போல் சுகிந்தன் (பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்),டேவிட் சுதர்சன் (பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜோன் சுஜீவன் (அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி), ஜசக் கில்பேட் (மாலைதீவு), டானியல் கியூபேட்(பரி தோமஸ் கல்லூரி, கொழும்பு), மேரி இவோன் (இந்து மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), காலஞ்சென்ற நோறா, மேரி மெலோனி (உடுவில் மகளிர் கல்லூரி), புலோறா, ஷலோமி,(உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு அவரின் இல்லத்தில் நாளை (09.10.2007) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் நவாலி அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*பிரசாத் வீதி,*
*நவாலி*
தகவல்:
பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
2007 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய பதினேழு மாணவர்களையும்

| | |
|---|---|
| ஸ்ரீ.சபாநந்தன் | - 171 |
| சி.சுவர்ணன் | - 170 |
| ஆ.அனுஷ்யா | - 166 |
| இ.நிரோஜன் | - 165 |
| சி.ரிஷிகோபன் | - 165 |
| கு.கீர்த்தனா | - 164 |
| உ.கிருஷாந்தி | - 161 |
| தே.சேந்தன் | - 160 |
| எ.எட்மன் லூக்ஸ்சன் | - 160 |
| ஜெ.றஜீவனி | - 148 |
| சி.ஜெயலட்சுமி | - 148 |
| சி.சுஜன் | - 148 |
| மை.லக்ஷிகா | - 145 |
| வி.பிரசன்னா | - 144 |
| ஸ்ரீ.நிருஷாந் | - 144 |
| த.லக்ஷ்மி | - 143 |
| வா.அமல்கரன் | - 140 |

வெட்டுப் புள்ளியை அண்மித்த புள்ளிகளைப் பெற்ற 23 மாணவர்களையும் கல்வியில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று சாதனைகள் படைத்து நீடுழி வாழ வாழ்த்துகிறோம். அத்துடன் இவர்களுக்கு அறிவு விளக்கை ஏற்றிவைத்த அதிபர், ஆசிரியர்களையும் நீடூழிவாழ வாழ்த்துகிறோம். இவ் வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக விளங்கும் அனைத்து உள்ளங்களையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் , மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்தி சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(66678)

## நீங்காத நினைவில்
## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 06 - 10 - 1961



உதிர்வு 24 - 09 - 2000

**வீரசிங்கம் உதயகுமார் (B.Sc.)**

(ஆசிரியர், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி)

திதி: துவாதசி 08.10.2007

நெடிய ஏழாண்டுகள் நேற்றுப் போல் ஆறுதலின்றி
நெஞ்சினை வாட்டும் சோகம் மட்டும் சொந்தமாய்
சொல்லிட வார்த்தையின்றிச் சோர்ந்துவிட்டோமப்பா
சோகமாய் வாழ்வின் அத்தியாயமே முடிந்தமையால்....

இன்பமோ துன்பமோ இதமுடன் பகிர்ந்திட - எம்
இல்லத்திற்கு ஒளியூட்டிட இல்லையே அப்பா
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அவையெல்லாம்
அப்பாவின் அன்புக்கு, ஆதரவிற்கு ஈடாகுமா?

ஆத்மா சாந்திக்காய் அனுதினமும்
கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

*செங்குந்த வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*
*பிரிவால் துயருறும்*
குடும்பத்தினர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது நலன்புரிச் சங்க அங்கத்தவரும், வலி. வடக்கு - தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவு சமூக சேவைகள் அலுவலருமாகிய ந.புரட்சிதாசன் அவர்களின் அன்புத் தந்தை

**கந்தப்பு நல்லையா**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

சமூக நலத்துறை திணைக்கள
உத்தியோகத்தர்களின் நலன் புரிச்சங்கம்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(66638)

## மரண அறிவித்தல்

### *வைத்திய கலாநிதி வேலுப்பிள்ளை யோகநாதன்*

கல்வயலைப் பிறப்பிடமாகவும் யாழ்.பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியகலாநிதி வேலுப்பிள்ளை யோகநாதன் 05.10.2007 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் திலகவதியின் அன்புக் கணவரும், அருள்மொழி, ஞானமொழி ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரன், சுரேஷ் ஆகியோரின் அன்பு மாமனும் பவித்திரா, உமா, ஹரி ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் காலஞ்சென்ற வே.நடராசா(உதவி ஆணையாளர், கூட்டுறவுத் திணைக்களம்), வே.பொன்னையா (விவசாயம்), வே.கந்தசாமி (மேலதிக பொது முகாமையாளர், இல. மின்சார சபை) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சேனாதிராசா, திருஞானசம்பந்தன், அம்பலவாணர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.10.2007) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்றிக்கேணி வீதி,*
*சாவகச்சேரி வடக்கு, மீசாலை.*

தொ.பே.:
00442084456056
00442088109367

தகவல்:
திருமதி சேதுப்பிள்ளை பொன்னையா (மைத்துனி),
திருமதி அருட்சோதி சிவசுப்பிரமணியம்(பெறாமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரு.மெதடிஸ்த பெண்கள் பாடசாலையில் இணையத்தளம்

பருத்தித்துறை, ஒக்.8

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கான இணையத் தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தள மூலம் பாட சாலை பற்றிய தகவல்களை அறிய முடியு மென அறிவிக்கப்பட்டுள்ளது.

இணைத்தள ஆரம்பவிழா பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது. பாடசாலை யின் சிரேஷ்ட மாணவத்தலைவி செல்வி பாகினி சிவசுவாமி சம்பிரதாய பூர்வமாக இணையத்தளத்தை ஆரம்பித்து வைத் தார். இவ்விழாவிலே மாணவிகள், பாட சாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கள், பழைய மாணவிகள் சங்க உறுப்பி னர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்ட னர்.

(203-218)

## வீதி புனரமைப்பு

வடமராட்சி, ஒக்.8

பருத்தித்துறைப் பிரதேசசபைக் குட்பட்ட காந்தியூர் சனசமூகநிலைய வீதி ஒரு லட் சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள் ளது.

இதற்கான நிதியை யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பண் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்திருந்தார்.

(203-170)

## நிகழ்வுகள்

பருத்தித்துறை, ஒக்.8

பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரி யர்கள் கௌரவிப்பு விழா இன்று திங்கட் கிழமை பருத்தித்துறை சக்கோட்டை புனித சவேரியார் தேவாலய மண்டபத்தில் நடை பெறவிருக்கிறது.

பருத்தித்துறை பிரதேச முன்பள்ளி ஆசிரியைகள் சங்க ஆலோசகர் ஏ.என்.எஸ். திருச்செல்வம் தலைமையில் நடைபெற வுள்ள இந் நிகழ்வில் சக்கோட்டை பங்குத் தந்தை அருட்திரு பத்திநாதர் அடிகளார் ஆசியுரை வழங்குவார். பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

(203-218)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.8

நவாலி மகாவித்தியாலய பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை முதல்வர் இரா.வசந் தகுமார் தலைமையில் இடம் பெறவுள் ளது.

நிறுவுநர் நினைவு பேருரையினை யாழ்.வர்த்தகவங்கி முகாமையாளர் ச.ரவீந்தி ரன் நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்த ரலிங்கம் கலந்து கொள்வார். (203-95)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமைபுரியும் சமூகசேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஆகியோ ருக்கான மாதாந்த ஒன்று கூடல் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடை பெற இருப்பதாக மாவட்ட அலுவலர் அறிவித் துள்ளார்.

(203-288)

★ ★ ★

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை களிடையே சிறுவர் அரங்கப் போட்டிகள் எதிர்வரும் 20 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பங்கு கொள்ளும் பாடசாலைகள், நாடக எழுத்துருக்களை வலயக் கல்விப் பணி மனைக்கு அனுப்பி வைத்து தங்களது பங் களிப்பை உறுதி செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாய கம் அறிவித்துள்ளார். வலயங்களுக்கிடை யிலான சிறுவர் அரங்க நிகழ்வுகள் இம் முறை வடமராட்சிக் கல்வி வலயத்தில் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

(203)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் வழிகாட்டல் ஆலோசனை பாட ஆசிரி யர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதே பாட ஆசிரியர்களுக்காக மற் றொரு மூன்று நாள் செயலமர்வு எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் நடை பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

## விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்காத வர்த்தக நிறுவனங்கள் மீது சட்டநடவடிக்கை

### வணிகர் கழகம் விடுத்துள்ள அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.8

வர்த்தக நிறுவனங்களுக்கு முன்னால் விலைப்பட்டியல்கள் வைக்கப்படாத விடத்து உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வணிகர்கழ கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வர்த்தக நிறுவனங்களின் முன்னால் விலைப்பட்டியல் வைக்க வேண்டுமென யாழ்.மாவட்ட அதிபதியாலும் யாழ்.அரசாங்க அதிபரினாலும் எமது கழகத்தினாலும் பல முறை பத்திரிகை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது.

இதுவரை சில வர்த்தக நிறுவனங்கள் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காது இருக் கின்றன. விலைப்பட்டியல் இருக்குமிடத்து அத்தியாவசியப் பொருள்களின் விலை தெளி வில்லாதவாறு குறிப்பிடப்பட்டு இருப்பதும் அவதானிக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

ஆகவே சகல வர்த்தக நிறுவனங்களி லும் உடனடியாக விலைப்பட்டியல் நுகர் வோருக்கு தெளிவாகத் தெரியக்கூடிய தாக வைக்கவேண்டும். இதனைக் கடைப் பிடிப்பதனால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தம்மைப் பாது காத்துக் கொள்ளலாம் என்பதனையும் அறி யத் தருகின்றோம் - என்றுள்ளது. (203)

## திருத்தியமைக்கப்பட்ட சம்பளச் சுற்றறிக்கை கிடைக்காத அரச ஊழியர்கள் பெரும்சிரமம்

யாழ்ப்பாணம், ஒக்.8

அரசினால் திருத்தியமைக்கப்பட்ட அரச ஊழியர்களின் சம்பள அளவுத் திட்ட சுற்றறிக்கை சில திணைக்கள, அலுவல கங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

இதனால் திருத்தியமைக்கப்பட்ட புதிய சம்பளத்தினை பெறமுடியவில்லை யென ஊழியர்கள் கவலை தெரிவித்தனர்.

கடந்த ஜூலை மாதம் தொடக்கம் புதிய சம்பள அளவுத் திட்டப் பிரகாரம் சம்பளம் வழங்கப்படுமென பொதுநிர்வாக அமைச் சினால் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டி ருந்த போதிலும் இதுவரை உரிய சுற்ற றிக்கை கிடைக்காததால் புதிய சம்பளம் பெற முடியவில்லை.

புதியசம்பள அளவுத்திட்ட சுற்றறிக்கை பொது நிர்வாக அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இணையத்தள வசதி இல்லாத யாழ்.மா வட்ட அரச திணைக்கள ஊழியர்கள் சுற்ற றிக்கை தேடி அலைவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை கூடுதல் சேவைக்காலம் உள்ள உத்தியோகத்தர்களை விட குறைந்த சேவைக்காலம் உள்ள உத்தியோகத்தர்க ளுக்கு சம்பள அளவுத் திட்டத்தில் அதிக சம்பள அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதால் இந்த முரண்பாட்டினை நீக்கக் கோரி சில தொழிற்சங்கங்கள் அமைச்சிற்கு முறையிட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

## தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் உரம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.8

தென்மராட்சிப் பகுதியில் உள்ள விவ சாயிகளுக்கு மானிய அடிப்படையிலான உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

தென்மராட்சியில் மீசாலை புத்தூர்ச்சந்தி கமநல சேவை நிலையம், கைதடி கமநல சேவை நிலையம் என்பவற்றூடாக உரம் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு யூரியா உட்பட நிலப் பசளை, மேற்கட்டுப்பசளை என்பன மானிய விலைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்கள் பகுதி விவசாய சம்மேளனங்களூடாக கமநல சேவை நிலை யங்களில் நாளாந்தம் விவசாய சம்மேள னங்களுக்கென ஒதுக்கப்பட்ட தினங்க ளில் பெற்று வருகின்றனர்.

விவசாயிகள் உரவகையை பெற்ற பொழுதிலும் தென்மராட்சிப்பகுதிக்கு இது வரை மழைபெய்யாத காரணத்தால் எது வித வேலைகளையும் மேற்கொள்ள முடி யவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

நெற்பயிர்கள் கதிர்விட்டுள்ள நிலை யில் தண்ணீர் இன்றி கருகும் நிலையில் காணப்படுகிறது.

(203-131)

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஒக்.8

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் விவரங்கள் பாட சாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள் ளன.

அவற்றில் சில பாடசாலைகளின் விவ ரம் வருமாறு:-

**வதிரி திரு இருதயக்கல்லூரி**

பாஸ்கரன் ஆரணி - 170, தவரட்ணராஜா றொண்யா - 160, நாகேந்திரா துவாரகா - 160, யோகேந்திரன் அஜந்தா - 156, லோறன்ஸ் காலேப் - 147, யோகேஸ்வரன் நிறோஜா -147.

**கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.வி.**

லோ.விதுர்ஷா - 178, (வடமராட்சி வல யத்தில் மூன்றாம் இடம்), பா.விஜித்குமார் - 148, றெ.கலிபரன் - 148, சு.ஆர்த்திகா யினி - 147, வை.வரகுணன் - 143

**அச்சுவேலி மத்தியகல்லூரி**

சு.பிரவீனா - 165, சி.சிவலக்ஷனன் 163, இ.கஜனி - 160, வ.லக்ஷயன் - 158, சே.லக் ஷிகா - 152, அ.செலினி மஞ்சிகா -149, ஓ.கார்த்திகா - 146, செ.அருட்குமரன் - 142.

**வல்வை சிவகுரு வித்தியாசாலை**

இந்திரதாஸ் சுபாசினி - 143, சிறீஸ்கந் தராசா டிசாந்தி - 142, சிவபவான் மகா லஷ்மி - 141.

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்.**

ம.துசிதா - 183, சொ.கோகுலன் - 175, பு.செந்தூரன் - 169, கு.ஆர்த்திகா - 166, லி.ஜெயசுதா - 165, பா.ஹரிகரன் - 164, பா.வினோஜன் - 164, ச.மதுஷன் - 163, க.கஜரூபன் - 160, சி.பாமிலா - 157, உ.கௌதமி - 156, பி.துஸ்யந்தினி - 155, த.கார்த்தீபன் - 153, வே.கோகுலன் - 150, ந.இளங்கீரன் - 147, செ.சங்கீத் - 147, சு.சங்கீத் - 145, இ.கிவாஸ்கர் - 142, மு.கௌதமி - 141, பா.சர்மிளா - 140, ம.வைஸ்ணவன் - 140.

## அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கோண்டாவில் றோ.க.த.க.பாடசாலை, கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க. பாடசாலை, இடைக்காடு ம.வி, கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாலயம், அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், கோப்பாய் கந்த வேள் வித்தியாலயம், நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை ஆகிய பாடசாலை அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. பொருத்தமானவர்கள் எதிர்வரும்15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்று யாழ்.வலயகல்விப்பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

(203)

★ ★ ★

வலிகாமம் வலயத்துக்கு உட்பட்ட மாத கல் சென்.ஜோசப் மகா வித்தியாலய அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வை யிட்டு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப் படி வலயக்கல்வி அலுவ லகத்துக்கு அனுப்பி வைக்குமாறு வலிகா மம் வலயக் கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ் வரன் கேட்டுள்ளர்.

(203)

## பொதுசுகாதார பரிசோதகர் பருத்தித்துறையில் நியமனம்

வடமராட்சி, ஒக்.8

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதி காரி பிரிவுக்கு புதிதாக மூன்று பொது சுகா தாரப் பரிசோதகர்கள் நியமனம் பெற்றுள்ள னர்.

அண்மையில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய பொது சுகாதாரப் பரிசோதகர்களில் மூவர் இப்பிரிவுக்கு யாழ். பிராந்திய சுகாதாரத்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இப்பிரிவில் உள்ள அனைத்துப் பகுதிகளுக்குமான பொது சுகாதாரப் பரிசோதகர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

(203-170)

## நவாலிப்பகுதியில் நுளம்புப் பெருக்கம் அதிகரிப்பு

நவாலி, ஒக்.8

நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதி யில் நுளம்புப்பெருக்கம் நாளுக்கு நாள் அதிக ரித்து வருகிறது.

இப் பகுதிகளிலுள்ள பாவனையில்லா காணிகள், வீதிகள் என்பவற்றில் புல் பூண் டுகள் பற்றைகள் என்பன வளர்ந்துள்ளன. அத்துடன் இப்பகுதிகளில் கழிவுப் பொருள் களும் கொட்டப்பட்டு வருகின் றன.

இவற்றிலிருந்து நுளம்பு உற்பத்தி அதி கரித்து வருகின்றது. இதனால் டெங்கு மற் றும் பல நேய்களுக்கு மக்கள் ஆளாக வேண் டியுள்ளது.

சுகாதாரப்பகுதியினர் இவற்றை கவனத் தில் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கேட்டுகொள்கின் றனர.


(203-100)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளம்

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசா லைகளில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுக்கான ஜூன், ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாத சம்பளம் வழங் கப்பட்டு வருகின்றது.

தற்காலிகமாக இணைக்கப்பட்ட பாட சாலை அதிபரிடம் கடமையாற்றுவதை யும், இக்காலத்திற் பெற்ற லீவினையும் உறுதிப்படுத்திய கடிதத்தைக் கொண்டு வருதல் வேண்டும் என யாழ் வலயக் கல் விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

(203)



வதிரி வடக்கு மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையின் புதிய மாடிக்கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் புதிய மாடிக்கட்டட நினைவுக்கல்லை, 'வேள்ட் விஷன்' நிறுவன அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான முகாமையாளர் ஜீ.டீ.நைல்ஸ் திரைநீக்கம் செய்வதையும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் [illegible] புதிய மாடிக்கட்டடத்தை நாடா வெட்டித்திறந்து வைப்பதையும், 'வேள்ட் விஷன்' நிறுவன நீர் வழங்கல் நடவடிக்கைக்கான முகாமையாளர் [illegible] விக்கில்ஸ் கணணி அறையை நாடா வெட்டித்திறந்து வைப்ப தையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 ★ 05 ★ 1937



உதிர்வு 20 ★ 09 ★ 2006

### அமரர் கந்தையா அசுவதி

(முன்னாள் சாரதி, இ.போ.ச, டர்விஸ் எலக்ரோனிக் அன் மெக்கானிக். டோகா - கட்டார்)

திதி:- அபரபட்க்ஷ திரயோதசி

*அன்பின் பிறப்பிடமாய்*
*பாசத்தின் உறைவிடமாய்*
*குலவிளக்காய் ஒளி தந்த அன்புத்தெய்வமே!*
*ஈடுசெய்ய முடியாத உங்கள் இழப்பினால்*
*கதிகலங்கி வாடுகின்றோம்*
*வருடமொன்று ஓடி மறைந்தாலும்*
*மறையாது உங்கள் நினைவலைகள்*
*எம் நெஞ்சில் உயிர் உள்ளவரை.*

'அருணகிரி'
மானிப்பாய் வட - கிழக்கு.

**குடும்பத்தினர்.** (66559)

## ஆறாவது ஆண்டு நினைவில்...



அமரர்

### இளையதம்பி கணேசலிங்கம்

மண்ணில் 25.07.1957

விண்ணில் 29.09.2001

அன்பு மொழி பேசி எமை அரவணைத்த தெய்வமே!
அவனியிலே நின்பிரிவால் ஆறுதலை யாமிழந்தோம்
நல்வழியில் யாம் வாழவேண்டுமென்ற அப்பாவே!
நானிலத்தில் உங்களை யாம் என்றும் மறவோமே!

பொற்கொல்லர் வீதி,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

உம் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.** (66666)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 10 ✱ 06 ✱ 1927



விண்ணில் 20 ✱ 09 ✱ 2006

### அமரர் சின்னவன் வையிரமுத்து

ஆர்மோனிய வித்துவான் (கலைஞானகேசரி)

திதி 08.10.2007

ஐயா நீங்கள் மறைந்து ஓராண்டு ஓடிவிட்டாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரிந்ததில்லை.

சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு. (66593) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவில்...

அன்னை மடியில் 26 . 04 . 1953



ஆண்டவன் அடியில் 01 . 10 . 2005

### அமரர் பொன்னுத்துரை சரவணபவன்

(ராசா - மண்டைதீவு)

திதி:- அபரபக்க திரியோதசி (2007.10.08)

ஆண்டு இரண்டு ஆனது அப்பா!
அவனி விட்டு நீங்கள் சென்று - ஆனாலும்
அன்று போல் எம்முடனே என்றும்
நீங்கள் வாழ்கின்றீர்கள்
எண்ணமதை நிறைவாக்கி - நின்
நிலையான நினைவுகளுடன் தான்
நித்திலத்தில் வாழுகின்றோம்
நிலையில்லா வாழ்வுதனில் நிலையான

நின் நினைவால் நெஞ்சுருகி
போகின்றோம் எம் செல்வமே! - அப்பாவே!
கண்கண்ட தெய்வம் நீ!
கனவில் வருகின்றாய்
கடுகதியில் மறைகின்றாய் - கற்பனையில்
வாழும் என்னை களிப்படைய வைப்பதெப்போ!
எம் தெய்வமே! அப்பாவே! நின் ஆத்மா
சாந்திபெற நித்தம் தொழுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

59, பொற்பதி வீதி,
கொக்குவில்.

ஆறாத் துயரில்
அன்புப் பெற்றோர், அருமைச் சகோதரர்கள்,
அன்பு மனைவி, அருமைச் செல்வங்கள். (66658)

## 45 ஆவது நாள் நினைவலைகள்...

பிறப்பு 10 - 01 - 1972



இறப்பு 25 - 08 - 2007

### அமரர் சண்முகநாதன் சசிதரன்

*குடும்பத்தை முன்னேற்ற குல முத்தாய்ப் பிறந்தவனே*
*மகிழ்விழந்து நாமிருக்க மாயமாய் நீ போனதென்ன?*
*அழுது அழுது அழைக்கிறோம் அமைதியாய் நீ தூங்குவதேன்?*
*45 நாள்களென்ன 45 வருடமானாலும் உன் பிரிவென்ற*
*துயரமது எம் மனதை விட்டு மாறாது.*

இன்று திங்கட்கிழமை (08.10.2007) முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

உன் பிரிவால் துடிக்கும்
சண்முகநாதன் (அப்பா), மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர். (66665)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*தரம் 5 புலமை பரிசில் பரீட்சை 2007 இல் 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த*
**யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவி**

செல்வி **மகிந்தன் அருண்ஜா**

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரின் சிறந்த சித்திக்கு உதவிய அதிபர், ஆசிரியர்களுக்கும் சுன்னாகம் AAT நிறுவனத்தினருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.*

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (66608)

அப்பப்பா, அப்பம்மா,
சித்தப்பா,
அப்பா, அம்மா, சகோதரிகள்,
அத்த மாமா, அத்தை,
யதுகுட்டி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் - 5, 2007 புலமைப் பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

செல்வி **சரண்யா கிங்சிலி**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வெட்டுப் புள்ளியை அண்மித்த செல்வி சிவசண்முகநாதன் பகீர்த்தனா அவர்களையும் இவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களான திருமதி ஸ்ரீஜெயந்தி அகிலன், திரு.இ.கிருஸ்ணசேகரன் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர் கல்வியையும் சிறப்பையும் பெறவும் புனித சவேரியாரின் ஆசீர் தொடர்ந்தும் கிடைத்திட வேண்டுகின்றேரம்.

பழைய மாணவர்கள்,
பாடசாலை அ.சங்கம்,
யா/குளமங்கால் றோ.க. வித்தியாலயம்,
மல்லாகம். (66579)

## கண்ணீர் அஞ்சலி

நீராவியடி ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர் ஆலயத்தை சிறிது காலம் பரிபாலித்த வரும் மேற்படி ஆலய இராஜ கோபுர நிர்மாணத்தின்போது அதனை மேற்பார்வை செய்து அழகுபடுத்தியவருமாகிய

வைத்திய கலாநிதி

### வேலுப்பிள்ளை யோகநாதன்

அவர்கள் லண்டன் மாநகரில் வெள்ளிக் கிழமை (5.10.2007) காலமானதை யிட்டு அன்னாருக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

அவரது ஆத்மா ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

வை.இரகுநாதமுதலியார்
குடும்பத்தினர்,
ஸ்ரீ ஜய வீரகத்தி விநாயகர்
ஆலயம். (66654)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் சமூக சேவை உத்தியோகத்தர்

நல்லையா புரட்சிதாசன்

அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

### கந்தப்பு நல்லையா

அவர்கள்

சிவபதமடைந்தமையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும், சகல நலன்புரிச் சங்க அங்கத்தவர்களும், நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், தெல்லிப்பளை (66619)

## சந்தோஷமான வாழ்த்துக்கள்



தரம் 5, 2007 புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியும், கனகராசா - ஜெயராணி தம்பதியின் புதல்வியுமான

**செல்வி சுரேகா**

அவர்களை

**மனதார வாழ்த்துகின்றோம்.**

மேலும் இவர் பல சாதனைகள் புரிந்து சீரும் சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்பாராக. அத்துடன் இவர் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஊக்கமளித்த பெற்றோர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களையும் மனதார பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

ஆசாரி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

*வாழ்த்துவோர்:*
சித்தப்பா, சித்தி, சங்கீர்தா (தங்கை)
சந்தோஷ் (தம்பி) (66626)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில்147 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த

*கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன்* பாடசாலை மாணவன்

செல்வன் **சிவனேசன் விதுஷன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவரது வெற்றிக்குக் காரணமானவர்களான பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் பிரத்தியேகமாகக் கல்வி கற்பித்த ஆசிரியை செல்வி.சி.கவிதா அவர்களுக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'சந்திரோதயம்',
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

வாழ்த்துவோர்:-
பொ.செல்லத்தம்பி (பேரன்) மற்றும் குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

922 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம் 09 17 19 53

05-10-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5221823 - 5237318

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 342,335 | 10/- | 3,423,350/- |
| 2 இலக்கங்கள் | 31,565 | 20/- | 631,300/- |
| 1 இல. + லக்கினம் | 31,261 | 30/- | 937,830/- |
| 2 இல. + லக்கினம் | 2,806 | 100/- | 280,600/- |
| 3 இலக்கங்கள் | 829 | 500/- | 414,500/- |
| 3 இல. + லக்கினம் | 79 | 5,000/- | 395,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,482,580/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 408,884 | | 7,506,080/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,765,000/-

தொடர் இல.4347157 க்கு மேற்பட்ட நில நிற டிக்கட்டுக்கள் 2007 ஒக்டோபர் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5229042-5-03 |
| பொலன்னறுவை | 5225694-5-10 |
| ஹம்பாந்தோட்டை | 5223190-0-41 |
| கம்பஹா | 5229766-8-08 |
| இரத்தினபுரி | 5229878-7-21 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## நினைவஞ்சலி

22 ஆவது ஆண்டு



செல்வி
கலைச்செல்வி தர்மலிங்கம்
தோற்றம் 01.10.1970 மறைவு 01.07.1985

8 ஆவது ஆண்டு



திருமதி
மகேஸ்வரி தர்மலிங்கம்
தோற்றம் 08.03.1940 மறைவு 08.10.1999

கல்வயல், சாவகச்சேரி. (66575)

உங்கள் பிரிவால் துயருறும்
சி.தர்மலிங்கம் (அப்பா - கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய கட்சி சமஷ்டியை கைவிட்டுள்ளதால் இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசுக்கு உதவவேண்டும்

## ஜனாதிபதி மஹிந்தா அழைப்பு

கொழும்பு, ஒக்.8

சமஷ்டி முறையிலான தீர்வை ஐ.தே. கட்சி கைவிட்டுள்ளது. எமது நிலைப்பாடும் அதுவே. எனவே தேசியப்பிரசினைக்கு தீர்வுக்கான உச்சக்கட்ட ஆதரவை ஐ.தே. கட்சி அரசுக்கு வழங்க வேண்டும்.

இப்படிக்கேட்டுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மொனராகலவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படி கோரினார்.

அங்கு பேசுகையில் மஹிந்த மேலும் கூறியதாவது:-

தேசியப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கவும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க ஐ.தே.கட்சி உட்பட அனைத்துக்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

சமஷ்டி முறையைக்கைவிட்டு தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண ஐ.தே.கட்சி இணங்கியுள்ளதை பாராட்டுகிறேன். எமது நிலைப்பாடும் ஐ.தே.கவின் நிலைப்பாடும் ஒன்றாகிவிட்டன.

எனவே, தேசியப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உச்சக்கட்ட ஒத்துழைப்பை அரசுக்கு ஐ.தே.கட்சி வழங்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான வெற்றிகளை இராணு நடவடிக்கைகள் மூலம் நிலைநாட்டி வருவதுடன் நாம் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறோம்.

ஆனால் சில தலைவர்கள் வெளிநாடுகளில் அரசுக்கு எதிராக பிரசாரம் செய்து வருகின்றனர். மனித உரிமைகளை மீறும் நாடு என்றும் வங்குரோந்து நிலையில் உள்ள நாடு என்றும் தெரிவித்து இலங்கைக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என்று அவர்கள் தடுப்பதற்கு முனைகின்றனர். (அ-1)

## தெஹிவளையில் தமிழ் இளைஞனை காணவில்லை என முறைப்பாடு

கொழும்பு,ஒக்.8

தெஹிவளையில் வசித்து வந்த இளைஞர் ஒருவரைக் காணவில்லை என்று அவரது உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தெட்சணாமூர்த்தி அகில்ராஜ் (வயது 22) என்பவரையே கடந்த நான்காம் திகதி தொடக்கம் காணவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை அவர் பணிபுரியும் தனியார் நிறுவனத்துக்கு வேலைக்கு புறப்பட்டவர் நேற்று வரை வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். கண்காணிப்புக் குழுவிலும் இதுகுறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1)

## கோத்தபாயவுடன் நேரடி தொடர்புக்கு ஊடகங்களுக்குத் தடை உத்தரவு

கொழும்பு, ஒக்.8

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை ஊடகவியலாளர் நேரடியாகத் தொடர்புகொள்ளக் கூடாது என்று தேசியப் பாதுகாப்புக்கான ஊடகமையம் உத்தரவிட்டுள்ளது.

தேசப் பொறுப்புள்ள பணிகளில் மிகத் தீவிரமாக அவர் ஈடுபட்டுள்ளமையால் பாது காப்பு நிலைமைகள் தொடர்பிலான சந்தேகங் களுக்கு அவரைத் தொடர்பு கொள்ள வேண்டாம் என்றும் -

தேசியப் பாதுகாப்புக்கான ஊடக மையத்தையோ அல்லது கோத்தபாய்வுடன் தொடர் புகளை ஏற்படுத்த தேசிய பாதுகாப்புக்கான ஊடக மைய இயக்குநரையோ தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் ஊடக மைய இயக்குநர் லக்ஷ்மன் கூலகலே தெரிவித்துள்ளார். (சி)

# இலங்கை உட்பட்ட ஆசியப்பிராந்தியத்தில் அமெரிக்காவின் அதி நவீன வேவு விமானம்

## அதற்கான ஏற்பாடுகள் மும்முரம்

இந்தியா, இலங்கை உள்ளிட்ட நியுயோக் - பசுபிக் பிராந்தியங்களில் உயர் தொழில் நுட்பங்களைக் கொண்ட 'ஹவ்க்' உளவு விமானத்தின் சேவைகளைப் பயன்படுத்த அமெரிக்கா திட்டமிட்டு வருவதாக இலங்கையின் உயர் பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் தன் செல்வாக்கை அதிகரிப்பதற்காக நவீன தொழில் நுட்பம் கொண்ட உளவு வானூர்த் திகளை இலங்கை உட்படப் பல ஆசிய நாடுகளுக்கு வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இதற்கான மாநாடு ஒன்று அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வமற்ற பேச்சுகள் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்றுவருகின்றன. அமெரிக்காவின் இந்த மாநாடு எதிர் வரும் ஆண்டு ஏப்ரல் மாதம் ஹவாயில் நடத்தப்படும் எனத் தற்காலிகமாக தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியக் கட்டளை மையம் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்துள்ளது.

விமானிகள் இல்லாத - மிகவும் அதிக தொலைவில் பறக்கும் - 'குளோபல் ஹவ்க' வானூர்த்திகளின் பாவனக்கான பிராந்தியங்களின் ஆதவுகள்குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

'ஹவ்க்' உளவு விமானம் நோர்த்ரொப் குருமான் நிறுவனத்தினால் கட்டப்பட்டது.

'குளேபல் ஹவ்க்' உளவு விமானம் (Global Hawk) 2001 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி உலக வர்த்தக மையம் தாக்குதலுக்கு இலக்கானதற்குப் பின்னர் அமெரிக்காவினால் சேவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

கண்காணிப்பு சக்தி அதிகம்

இது 65 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தவாறு மிகவும் துல்லியமாக அதிகளவான பிரதேசங்களை கண்காணிக்கும் தன்மை கொண்டது. 35 மணிநேரம் தொடர்ச்சியாகவும் பறக்கக்கூடியது.

2கோடியே 76 லட்சம் டொடர்கள் பெறுமதியான இந்த விமானம், பெற்ற தகவல்களை உடனடியாக தரையில் உள்ள கட்டளை மையங்களுக்கு அனுப்பும் திறன் கொண்டது.

மேலும் நவீன ராடார்கள், ஊதா மற்றும் பார்வைபுல உணர்திறன் கொண்ட சாதனங்கள் என்பவற்றையும் கொண்டுள்ளது.

குவாமில் உள்ள ஆன்டேர்சன் வான்படைத்தளத்தில் இருந்து இந்த விமானம் 2009 ஆம் ஆண்டு பறக்கத் தொடங்கும் போது அது ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவிற்கான மிக முக்கிய புலனாய்வு மையமாக விளங்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவின் இந்தத் திட்டத்தில் பங்குபற்றும் நாடுகள், இந்த விமானத்துக்கான தரையிறங்கும் மற்றும் ஏவும் தளங்களை வழங்கும்.

அமெரிக்கா இந்தத் திட்டத்தை முதலில் ஜப்பான், தென்கொரியா. அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, இந்தியா, புருணை, இலங்கை அகிய நாடுகளில் மேற்கொள்ள உள்ளது.

இதனிடையே இந்த மாநாட்டிற்கு அழைக்கப்பட உள்ள நாடுகளின் பட்டியல் மேலும் நீடிக்கலாம் என பசுபிக் பிராந்திய வான்படைத் தலைமையகமான ஹிக்கம் வான்படைத்தளத்தின் பேச்சாளரான கப்டன் கிறிஸ்ரின் மில்லர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு இந்த வேவு விமானத்தை ஆசியப் பிராந்தியங்களில் சேவை யில் ஈடுபடுத்துவதன் மூலம் அதன் ஆளு மையை விளக்க முடியும் எனப் பசுபிக் பிராந்திய வான் படை தலைமையத்தின் தலைவரான ஜெனரல் போல் ஹெஸ்ரர் தெரிவித்துள்ளார். (சி)

# காணாமற் போனோரின் உறவினர்கள் ஆர்பர் அம்மையாரை சந்திக்க ஏற்பாடு செய்யப்படவேண்டியது மிக அவசியம்

## கூட்டமைப்பு சார்பில் வலியுறுத்து

கொழும்பு, ஒக்.8

இலங்கைவரும் ஐ.நா.வின் மனிதஉரிமைக்கான தூதர் லூயிஸ் ஆர்பர் அம்மையாரிடம் காணாமற்போனவர்களின் உறவினர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

ஐ.நாவிடமும் இலங்கை அரசிடமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கண்ட வாறு கோரியுள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது.:-

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் காணாமற்போனவர்களின் உறவினர்களை ஆர்பர் அம்மையார் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். ஒரு சிலரை மாத்திரம் சந்திக்க ஏற்பாடாகி உள்ளதாக அறிகிறோம்.

காணாமற்போனோர் எண்ணிக்கை பெருமளவில் இருக்கும் போது ஒரு சிலரைச் சந்திப்பதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை அவர் ஒட்டுமொத்தமாக புரிய முடியாமல் போய்விடும்.

காணமற்போனவர்களின் விடயத்தில் இலங்கை அரசு உண்மையாகவும் நேர்மையாகவும் செயற்படுவதாக இருப்பின், அந்த மக்களை ஐ.நா. சந்திக்க முழு ஒத்துழைப்பையும் வழங்க முன்வரவேண்டும்.

ஜனாதிபதியையும், எதிர்க்கட்சித்தலைவர்களையும் அரச அதிகாரிகளையும் மட்டும் ஐ.நா. அதிகாரி சந்திப்பதால் பயன் இல்லை. பாதிக்கப்பட்ட மக்களையே அவர் சந்திக்க வேண்டும்.

இச்சந்திப்புக்களுக்கு படையினரோ, பொலிசாரோ தடையாக இருக்கக் கூடாது- என்றார் அவர். (அ-1)

## சந்தேகத்தில் கைதான 15 பேரை விளக்கமறியலில் வைக்கஉத்தரவு

கொழும்பு, ஒக்.8

முத்துராஜவெல ஷெல்காஸ் நிறுவனம், எண்ணைக்குதம், கட்டுநாயக்க இராணுவ விமான நிலையம் ஆகியவற்றுக்கும் கொழும்பில் முக்கிய பொருளாதார இலக்குகள் மீதும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான 15 பேரை இம்மாதம் 18ஆம் திகதிவரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிவான் சறோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இவர்கள் 15 பேரும் கொட்டாஞ்சேனை பொலிஸாரால் சமீபத்தில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப் படும் ஒரு தொகை ஆயுதங்களையும் இவர்கள் நீதிமன்றில் ஒப்படைத்தனர். (சி)

# நூலக விழிப்புணர்வு நிறுவகத்தால் மாணவரிடையே பல்வேறு போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.நூலக விழிப்புணர்வு நிறுவகம் பாடசாலை மாணவர்களிடையே எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மாபெரும் நூலக விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

தமிழ் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் நூலக விழிப்புணர்வு நிறுவகம் பொது அறிவு, கட்டுரை மற்றும் போட்டிகளை நடத்தவுள்ளது.

வலிகாமம் கல்வி வலய மாணவர்களுக்கான போட்டிகள் மானிப்பாய் மகளிர் கல்லூரி, வட்டு.இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகிய இடங்களிலும்-

வடமராட்சி வலய மாணவர்களுக்கான போட்டிகள் வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியிலும்-

தென்மராட்சி வலய மாணவர்களுக்கான போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம் ஆகிய இடங்களிலும்-

தீவக வலய பாடசாலைகளுக்கான போட்டிகள் ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் மகாவித்தியாலயத்திலும்-

யாழ்ப்பாண வலய மாணவர்களுக்கான போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் சம்மந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அனுமதி அட்டைகள்கிடைக்கப் பெறாத பாடசாலை அதிபர்கள் இது தொடர்பான மேலதிக விவரங்களை செயலாளர், நூலக விழிப்புணர்வு நிறுவகம், யாழ்ப்பாணப் பொது நூலகம் (தொ.பே.இல. 222 6028) என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்று நூலக விழிப்புணர்வு நிறுவகம் தெரிவித்துள்ளது. (203)

## பருத்தித்துறை சிவன் ஆலய மேற்குப்புற இராஜகோபுரம் 70 லட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

பருத்தித்துறை, ஒக்.8

பருத்தித்துறை பசுபதீஸ்வர ஆலய (சிவன் கோயில்) மேற்கு புற வாசலுக்கான இராஜகோபுரம் சுமார் 70 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கபடவுள்ளது.

இந்த இராஜ கோபுரம் இந்தியாவிலிருந்த வருகை தரவுள்ள சிற்பக்கலைஞர்களால் நிர்மாணிக்கப் பட்வுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை ஆலயத்திருப்பணிச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டது. (203-218)



சர்வதேச இந்து ஒன்றியத்தின் கருத்தரங்கு நிகழ்வு யாழ். ஆனைப்பந்தி சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் கலந்து கொண்ட அந்தண சிவாச்சாரியார்களையும் சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக் [illegible] சிவஸ்ரீ வித்தியானந்த குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் சிவஸ்ரீ நா.சரவவேஸ் [illegible] ங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மத்திய கல்லூரி

**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக் கூட்டம்- 2007**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 27.10.2007 சனிக்கிழமை மு.ப.10 மணிக்கு சங்கத் தலைவர் V.T. சிவலிங்கம் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

1. மௌன வணக்கம்
2. தலைவர் உரை
3. போசகர் உரை
4. சென்ற கூட்ட அறிக்கை
5. செயற்பாட்டறிக்கை- செயலாளர்
6. பொருளாளர் கணக்கறிக்கை
7. பிரேரணைகள் (இருப்பின்)
8. உத்தியோகத்தர்கள் தெரிவு
9. இதர விடயங்கள்

பிரேரணைகள் சமர்ப்பிப்பவர்கள் 18.10.2007 இற்கு முன்பாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ சேர்க்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

ச.தவநேசன்,

கௌரவ செயலாளர், பழையமாணவர் சங்கம், யாழ்.மத்திய கல்லூரி.

(#153904)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ மாதகல் சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலையில் கல்வி பயின்று தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2007 இல் சித்தி பெற்ற மாணவர்களான

றொ.நிதுஷா- 156
சி.நிலோஜன்- 146
பீ.கில்மன்ராஜ்- 143
ஜெ.ஜெயமலர்- 141

ஆகியோரையும் வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவன் யோ. ஜெயரூபன் 139
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஏனைய 6 மாணவர்களையும் இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியை திருமதி றெ.சா.நேசகுமாரை யும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**

(66632)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் 145 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய மாணவன்

**செல்வன் தவேந்திரராஜா சுஜிந்தன்**

அவர்களைப் பாராட்டி, அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர், வகுப்பாசிரியை ஏனைய ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் அவர் கல்வியில் எதிர்காலத்தில் சிறந்து வாழ விநாயகரை வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்.

ஆனைப்பந்தி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(#153395)

**அப்பம்மா, பெற்றோர், அண்ணா, தம்பிமார், உறவினர், நண்பர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி

**விதுர்ஷா லோகேஸ்வரன்**

அவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று வடமராட்சி வலயத்தில் 3 ஆம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை ஈட்டித் தந்துள்ளார். இவர் மேலும் பல கலைகளையும் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**அன்பான உள்ளங்கள்.**

(66611)

## அச்சுக்கூட சேவை

(Guillotine Blade) பேப்பர் கட்டர் கத்தி நவீனமுறையில் திட்டிக் கொடுக்கப்படும்.
(Dissertation Binding) ஆய்வு கட்டுரைகள் சிறந்த முறையில் கட்டிக் கொடுக்கப்படும்.

**பத்மாஸ்**

கொமினிக்கேஷன் & அச்சகம்

398, ஆஸ்பத்திரி வீதி. 28/1, ஓட்டுமடம் வீதி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி செல்வி

**பிரதீபா வாகீசன்**

2007 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். இவர் பரீட்சையில் சித்தி பெறுவதற்கு ஊக்கமளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரை மனதாரப் பாராட்டுவதுடன், பிரதீபா கல்வியில் சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

பா.தமிழினி,
195, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
**அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமாமார், சித்தப்பாமார், சித்தி.**

(66546)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Canon 1215 போட்டோ கொப்பி இயந்திரம் விற்பனைக்கு உண்டு. உதிரிப் பாகங்கள், ரோணரும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 137, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி. (66660)

## யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான அறிவித்தல்

**மானம்பூ உற்சவம்**

21.10.2007 ஞாயிற்றுக்கிழமை

கும்பபூஜை காலை 6.15 மணி
மூலஸ்தான பூஜை காலை 7 மணி
வசந்த மண்டபப் பூஜை காலை 7.30 மணி

தொடர்ந்து வாழைவெட்டு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து காலை 8 மணி முதல் கேதாரகௌரி கொலு வைத்து விதரகாரர்களுக்கு தொர்ப்பை வழங்கி சங்கர்ப்பிக்கப்படும். பி.ப. 2.30 மணி முதல் உற்சவம் ஆரம்பமாகி 21 தினங்களும் இலட்சார்சனை இடம்பெறும்.

* கௌரிகாப்பு நூலுக்கு பதியும் அடியார்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
* வழமை போன்று இலட்சார்சனை பூர்த்தி பொது உபயத்தில். பங்குபெறும் அடியார்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

சிவஸ்ரீ நா.சிவதர்சக்குருக்கள்,
**ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவும்.**

(66610)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

சிவநாதன்- மாலினி தம்பதியரின் செல்வப் புதல்வன் **செஹான்** தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (08.10.2007) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் 211, 2 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். செஹானை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், மச்சான்மார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார் மற்றும் அன்புள்ளம் கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் தேவ அருள்பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

211, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மயில்வாகனம் (அம்மப்பா).

(64637)




## காணி விற்பனைக்கு

இல.94, நாவலர் வீதியில் 1 3/4 பரப்பு காணி, கிணறு மற்றும் தென்னைமரங்களுடன் உடன் விற்பனைக்கு. தொடர்பு:
0716208730,
0713252325

## SPOKEN ENGLISH

Spoken English CD கள் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. பூபாலசிங்கம் புத்தகசாலை, பஸ்நிலையம் யாழ்ப்பாணம்.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





அன்ரனிதாஸ்- மேரி இமெல்டா தம்பதியரின் செல்வப் புதல்வி **அபினா** தனது முதலாவது பிறந்தநாளை லண்டனில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை லண்டனில் இருக்கும் அப்பப்பா சந்திரன், துரைமணிப் பெரியப்பா குடும்பத்தினர், திருச்செல்வம் அப்பப்பா குடும்பத்தினர், வசந்தன் மாமா, தொட்டப்பா, தொட்டம்மா, அக்கா அபிஷா, மாதகலில் வசிக்கும் அப்பம்மா வயலற், அத்தை வளர்மதி, மாமா ராசகுமார், அத்தான் லவன், மச்சாள் லவநிதா, கொழும்பில் வசிக்கும் சின்னத்தை நதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் பாட்டி திருமதி மரியநாயகம் மற்றும் சகலரும் குழந்தை இயேசு துணைகொண்டு சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: அம்மம்மா (ச.ச. - மாதகல்).

(64952)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 | 08 |
| 07 | 09 |
| 1930 | 2007 |



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் இளையதம்பி நவரத்தினம்**

(முன்னாள் பரிசோதகர், C.T.B.)

"பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
நேசத்துடன் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
தூரத்தில் இன்று நீங்கள் சென்று விட்டதனால்
துயரத்தில் நாம் இங்கு தேம்பி அழுகின்றோம்"

எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் தகனக்கிரியைகளுக்கு உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும் அன்றைய தினம் பல வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (08.10.2007) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.106,
அம்பலவாணர் வீதி,
உடுவில், சுன்னாகம்.

(66633)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமை மீறல் விவகாரம்: அம்பலமாகும் உண்மைகள்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கைத் தீவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தெரிவித்த கருத்துகள் சம்பந்தமாக அமெரிக்கத் தரப்பில் இருந்து தகுந்த பதிலடி வந்திருக்கின்றது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமாக அதிகரித்திருக்கின்றன. ஆள்கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல், படுகொலைகள், கப்பம் அறவிடல் எனத் திட்டமிடப்பட்ட வன்முறைகள் தமிழினத்துக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை அரசுத் தலைமை காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளது என்பதையும் தாண்டி இத்தகைய மீறல்களின் பின்னணிச் செயற்பாடுகளுக்கும் அரசுத் தலைமைக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்றளவில் சந்தேகங்கள் கூறப்பட்டு வருகின்றன.

மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் தரப்புகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதில்லை என்பதற்கு அப்பால், அத் தரப்புகளுக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் விசேட ஏற்பாடுகள், ஒழுங்கு விதிகள் இலங்கையில் கடைப்பிடிக்கப்படுகின்றமை இந்த மோசமான நிலைமையின் பின்புலத்தில் - பின்னணியில் - அதிகார வர்க்கம் இருப்பதை உறுதிப்படுத்தும் ஆதாரமாகும்.

நாட்டில் தன்னாட்சி உரிமைகோரிப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்காகப் 'பயங்கரவாதத்தை' கைக்கொள்கின்றனர் எனக் கூறும் கொழும்பு அரசு, 'புலிப் பயங்கரவாதத்தை பதில் பயங்கரவாதத்தால் வெல்வது' - என்ற மிக மோசமான தந்திரோபாயத்தைத் தனது மனதில் கொண்டு, அந்த உத்தியின் ஒரு கட்டமாகவே இவ்வாறு மிக மோசமான மனித உரிமை மீறல்களுக்கு இடமளித்து, அதற்குத் தூண்டி, வழி செய்து நிற்கின்றது என்பது பொதுவாகவே சர்வதேசம்வரை புரிந்த பரம இரகசியமாகும்.

இந்த உண்மையை கொழும்பு அரசின் அதிகாரத் தலைமை முதல், கீழ் மட்டம் வரை பெயருக்கேனும் - உதட்டளவிலேனும் - மறுத்து, மறைத்து உரைத்து வருகின்றன என்பதும் இன்று அம்பலமான விடயம்தான்.

கடந்த வாரம் அமெரிக்காவில் தங்கியிருந்த இலங்கை ஜனாதிபதியிடம் விசேட செவ்வி ஒன்றைப் பெற்ற இணையத்தளச் செய்தி நிறுவனம் ஒன்று இவ்விடயம் குறித்து அவரிடம் நேரடியாகவே கேள்வி எழுப்பியிருந்தது.

"உங்கள் நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு, இறைமை, ஜனநாயகம் போன்றவற்றை உலகின் மிக மோசமான பயங்கரவாத இயக்கம் ஒன்றிடமிருந்து பாதுகாப்பதற்காகப் போராடி வரும் நீங்கள், அதேசமயம் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகின்றீர்கள். ஆனால் சர்வதேச சமூகம் - குறிப்பாக அமெரிக்கா - நீங்கள் பயங்கரவாதத்துக்கு எதிராகவே போராடுகின்றீர்கள், இனப் போராட்டம் ஒன்றுக்கு எதிராக அல்ல என்ற உங்களின் வாதத்தை ஏற்க மறுத்து வருகின்றதே?" - என்று செய்தி நிறுவனம் அப்போது ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியது.

அதாவது, நீங்கள் நடத்துவது பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டம் அல்ல, இன எதிர்ப்புப் போராட்டமே என்றே அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகம் கருதுகின்றது என ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, *"அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூட தனக்கான தகவல்களை உள்நாட்டுத் தரப்புகளிடமிருந்தும் அதிகாரிகளிடம் இருந்துமே பெற்றுக்கொள்கின்றது. சில சமயங்களில் அத்தகைய தகவல் வதந்திகளையும் தவறான கருத்துருவ நிலைப்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்து விடுகின்றன. இவ்விவகாரத்தில் மோசமான ஊடகப் பிரசாரமும், மற்றையோரின் ஆதரவுடன் கூடிய தமிழர் தரப்பின் சர்வதேசப் பரப்புரை வலையமைப்பும் எங்களைத் தோற்கடித்து விட்டன."* - என்று கூறியிருக்கின்றார்.

ஆக, இலங்கைக்கு எதிரான மிக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் பொய்யான பரப்புரைகளினாலும், வதந்திகளினாலும் புனையப்பட்ட ஆதாரமற்ற வசவுகள் என்பதே நாட்டின் ஜனாதிபதியிலிருந்து, தென்னிலங்கை அரசின் இறுதி அங்கம் வரை சகல தரப்புகளினாலும் கூறப்படும் சமாளிப்பாக இருந்து வருகின்றது.

இந்த நிலைப்பாட்டுக்கு - விளக்கத்துக்கு - கையோடு நல்ல பதிலடியைத் தந்திருக்கின்றது அமெரிக்கா.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம கடந்த வார இறுதியில் வாஷிங்ரனில் அமெரிக்க இராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளர் நிக்கலஸ் பேர்ன்ஸைச் சந்தித்திருக்கின்றார். இந்தச் சந்திப்பை ஒட்டி இலங்கை வெளிவிவகார அமைச்சு சமாளிப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்ட போதிலும், அமெரிக்க இராஜாங்க அமைச்சு பட்டவர்த்தனமான விடயங்களைக் குறிப்பிட்டு - உண்மை நிலையைப் போட்டுடைத்து - அறிக்கை ஒன்றின் மூலம் அம்பலப்படுத்தி இலங்கை அரசுத் தரப்புக்கு - அரசுத் தலைமைக்கு - நல்லதொரு குட்டுப் போட்டிருக்கின்றது.

*"இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை அரசை அமெரிக்கா இந்தச் சந்திப்பின்போது வற்புறுத்திக் கேட்டுக் கொண்டது.*

*"மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு குற்றம் இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, உரிய தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் வாஷிங்ரன் கொழும்பு அரசை வலியுறுத்தியுள்ளது.*

*"ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது குறித்தும் அமெரிக்கா தனது கவலையைத் தெரிவித்தது.*

*"கொழும்பில் ஆள்கடத்தல்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறைந்திருந்தாலும் நாட்டின் இதர பகுதிகளில் மனித உரிமை மீறல்கள் நீடித்து வருகின்றமை பற்றி நம்பகத்தன்மை கொண்ட அறிக்கைகள் கிடைத்து வருகின்றமை குறித்து அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது."*

- இந்தச் சாரப்பட அமெரிக்கத் தரப்பின் உத்தியோகபூர்வ அறிக்கை அமைந்திருக்கின்றது.

ஆக, அமெரிக்க மண்ணில் இருந்தபடி பேட்டியளித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படும் விடயங்கள் குறித்து, அடிப்படை அற்ற - ஆதாரங்கள் இல்லாத - வதந்திகளே அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகத்துக்குக் கிட்டி வருகின்றன எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

அந்தப் பேட்டி வெளியாகி, ஓரிரு தினங்களுக்குள் அந்த விடயத்துக்குத் தகுந்த பதிலடி - நேரடியாக - தந்திருக்கின்றது அமெரிக்கா.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றமை குறித்து வதந்தித் தகவல்கள் அல்ல, நம்பகரமான அறிக்கைகளே தங்களுக்குக் கிடைத்து வருகின்றன என்பதை தனது நாட்டின் பிரதி இராஜாங்கச் செயலாளர் மூலம் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு நேரடியாகவே எடுத்துரைக்கச் செய்து, அதனை அந்தச் சந்திப்பை ஒட்டிய தனது அறிக்கையிலும் இடம்பெறவைத்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சப்புக்கட்டல் - சமாளிப்பு - கருத்துக்கு நல்ல பதிலடி கொடுத்திருக்கின்றது அமெரிக்கா.

இது, இலங்கைக்கு - கொழும்பு அரசுக்கு - செம்மையாகப் புரிந்தும், அது புரியாதது போலத் தொடர்ந்து நடிப்பதுதான் வேடிக்கை.

# நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டி நாளைமுதல் 45 தினங்கள் பிரார்த்தனை

## சாயி அன்பர்களின் இல்லங்களில்

யாழ்ப்பாணம்,ஒக்.8

நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவ வேண்டி நாளை முதல் 45 தினங்கள் ஆன்மீக சாதனா என்னும் பிரார்த்தனை நிகழ்வு சாயி அன்பர்களின் இல்லங்களில் இடம்பெறவுள்ளது. சகல சாயி இல்லங்களிலும் சாயி அன்பர்களின் இல்லங்களிலும் இரவு 7 மணி முதல் 7.30 மணிவரை இந்தப் பிரார்த்தனை இடம்பெறும்.

சாயி பக்தர்களை தங்கள் குடும்பத்துடன் இணைந்து இந்தப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழு கேட்டுள்ளது.

இந்தப் பிரார்த்தனைக்கு அதிக சக்தி இருக்கிறது. பிரார்த்தனையின் அதிர்வலைகள் பரவி எதிர்மறை எண்ணங்களை அழித்து அன்பு, கருணை, சாந்தி, சமாதானம் என்ற தெய்வீக அதிர்வலைகளால் நிரம்பும்போது எல்லோருக்கும் சாந்தி சமாதானம் ஏற்படும். இந்தக் காலகட்டத்தில் நாம் செய்ய வேண்டிய அதிஉயர்ந்த ஆத்ம சேவையும் இதுவாகும். - என்று இணைப்புக் குழு தெரிவித்துள்ளது. (அ-1)

# வவுனியாவில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஒக.8

வவுனியா - போக்கிரவள்ளி, விளாத்திக்குளம் மற்றும் தம்பனை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் நிலக்கண்ணி வெடிகள் உட்பட சில ஆயுதப் பொருள்களைக் கைப்பற்றியிருக்கின்றனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கிறது.

நிலக்கண்ணி வெடிகள் - 250, 60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் - 41, டாங்கிகளைத் தாக்கியழிக்கும் கண்ணிவெடிகள் - 04, ரி - 56 ரகத்துப்பாக்கி - 02, ஆர்.பி.ஜி. துப்பாக்கி ரவைகள் - 04 மற்றும் உணவு, மருந்துப் பொருள்கள் போன்றவற்றையே படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)

# கசிப்பு வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல்

புலோலி மேற்கில் சட்டவிரோதமாகக் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு விளக்கமறியல் உத்தரவை பருத்தித்துறை நீதிமன்றம் விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக வீட்டில் வடிசாராயம் வடித்த ஒருவரும் கசிப்பு வடிப்பதற்கு கோடா வைத்திருந்த ஒருவரும் மாவட்ட நீதிமன்றத்தில் பருத்தித்துறை மதுவரி பரிசோதகர்களால் ஆஜர் செய்யப்பட்டனர்.

புலோலி மேற்கைச் சேர்ந்த இராசு நாகேந்திரன், தும்பளை இலச்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த வடிவேலு சிவசண்முகம் ஆகிய இரு சந்தேக நபர்களே பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இச் சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (1-218)

# வெளியில் இருந்து வரும் அழைப்புகளின் இலக்கங்களை அறிய தொலைபேசியில் வசதி

யாழ்ப்பாணம்,ஒக்.8

வெளியில் இருந்துவரும் தொலைபேசி அழைப்புக்கள் எங்கிருந்து வருகின்றன - அவற்றின் இலக்கங்கள் என்ன - என்று அறிந்து கொள்ளும் வகையில் சி.எல்.ஐ வசதியை 'ரெலிக்கொம்' நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த வசதியைப் பெற விரும்பும் தொலைபேசி பாவனையாளர்கள் 'ரெலிக்கொம்' அலுவலகத்தில் விண்ணப்படிவத்தைப் பெற்று அதனை நிரப்பி அனுப்பி வசதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த வசதிக்காக மாதாந்தக் கட்டணமாக 50 ரூபா அறவிடப்படும். அதற்கான உபகரணத்தை வெளியில் கொள்வனவு செய்து பொருத்த வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை வடக்குகிழக்குகான தொலைபேசிக் கொத்து வந்து சேர்ந்துள்ளது. தனியார் தமக்கு கூப்பன் கிடைத்ததும் நேரில் வந்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பிராந்திய முகாமையாளர் சொன்னார். 'ரெலிக்கொம்', யாழ் அலுவலகம், 'ரெலிக்கொம்' சேவை நிலையம், 'ரெலிக்கொம்' நெல்லியடி அலுவலகம் ஆகியவற்றில் தொலைபேசிக் கொத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

# கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டும் லயன்ஸ் கழகம் நிறுவப் பட்ட 50 ஆவது வருட நிறைவை முன்னிட்டும் யாழ்.விழிப் புலனற்றோர் சங்கமும் யாழ்.லயன்ஸ் கழகமும் இணைந்து கண்பரிசோதனை முகாம் ஒன்றை நாளை மறுதினம் புதன்கிழமை நடத்தவுள்ளன.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் 129, 2ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள அலுவலகத்தில் இந்த முகாம் இடம்பெறவுள்ளது

கண்பரிசோதனை செய்யப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-1)

# நீர்கொழும்பு மீனவர் சங்கத் தலைவர் கொலை; மதுரைப் பொலிஸார் தீவிர விசாரணை

தூத்துக்குடி,ஒக்.08

நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர் சங்கத் தலைவர் கனிசியஸ் பெர்னாண்டோ மதுரையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முடுக்கிவிட்டுள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

மதுரை சிறைச்சாலைக் காவலரால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனக் கூறப்படும்கனிசியஸ் பெர்னாண்டோ (வயது 43) என்பவர் தூத்துக்குடியில் தங்கியிருந்த விடுதியில் பொலிஸார் நேற்றுமுன்தினம் சோதனை நடத்தினர். இதன் போது முக்கிய ஆவணங்களைப் பொலிஸார் மீட்டனர் என அறியமுடிந்தது.

மதுரைச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் மீனவர்களைப் பார்ப்பதற்காக கடந்த வியாழக்கிழமை சிறைச்சாலை சென்றார் கனிசியஸ். அவரது ஆவணங்களைப் பரிசீலித்த அதிகாரிகள், மாலை 4 மணிக்கு வரும்படி அறிவுறுத்தினர். ஆனால், கனிசியஸ் பெர்னாண்டோ வேறு எங்கும் செல்லாது சிறைப் பகுதியையே சுற்றிச்சுற்றி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகத்துக்கிடமாக நடமாடித் திரிந்த அவர் தீவிரவாதியாக இருக்கலாமோ என்ற சந்தேகம் சிறைக்காவலருக்கு வலுக்கவே கனிசியஸை அவர் சுட்டுக்கொன்றார்.

அவரது அறையில் ஒரு சூட்கேஸ் மட் டுமே இருந்தது. அதில், லியோனியின் பட்டிமன்றக் கசட்டுகள், இரண்டு, பைபிள், இரண்டு புதிய சேலைகள் மற்றும் அவரது நிகழ்ச்சிக் குறிப்புகள் எழுதிய தினக்குறிப்பு என்பன இருந்தன.

இந்த மாதம் முதலாம் திகதி கனிசியஸ் விடுதியில் வந்து தங்கியிருந்தமை தெரியவந்தது. அதன் பிறகு அவர் தெர்மல் நகர் பொலிஸ் நிலையம் சென்று, மதுரைச் சிறைச்சாலையிலிருக்கும் மீனவர்களை மீட்பதற்கு உதவி செய்யும்படி கேட்டுள்ளார்.

சம்பவதினம் அதிகாலையில் மீண்டும் தெர்மல் நகர் பொலிஸ் நிலையம் சென்ற கனிசியஸ், தான் மதுரை செல்கிறேன் என அங்குள்ள பொலிஸாரிடம் கூறிவிட்டு பஸ்ஸில் சென்றுள்ளார். இலங்கை மீனவர்கள் பிடிபடும் போதெல்லாம் இவர் தமிழகம் வந்து, அவர்களை மீட்டுச் செல்வார் என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது. (சி)

# முஷாரப் ஜனாதிபதியாக பதவியேற்க முடியுமா? உச்சநீதிமன்றம் இன்று முடிவை வெளியிடும்!

இஸ்லாமாபாத்,ஒக்.8



நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்பார்த்தபடி பர்வேஸ் முஷாரப் அதிக வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்க உச்ச நீதிமன்றம் சாதகமான தீர்ப்பு வழங்குமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. உச்ச நீதிமன்றத்தின் முடிவு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பாகிஸ்தான் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவும் அதில் முஷாரப் மீண்டும் போட்டியிடவும் உச்ச நீதிமன்றத்தின் 10 நீதிபதிகள் அடங்கிய ஆணையம் அனுமதியளித்தது. ஆனால், அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தடை விதிக்கக் கோரும் மனு மீதான வழக்கின் விசாரணை முடிவடையும்வரை தேர்தல் முடிவை வெளியிடத் தடைவிதித்தது.

இந்நிலையில், பாகிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தல் பலத்த பாதுகாப்புடன் நேற்றுமுன்தினம் நடந்தது. அதில் ஜனாதிபதி முஷாரப்பை எதிர்த்து பெனாஸிரின் மக்கள் கட்சி வேட்பாளர் மக்தூம் அமீனும், சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் வாஜீகுதீன் அகமதுவும் வேட்பாளர்களாக நின்றனர். இந்தத் தேர்தலில் நாடாளுமன்ற மக்களவை செனட் சபை மற்றும் 4 மாகாண சட்டப் பேரவைகளின் உறுப்பினர்கள் வாக்குப்போட்டனர்.

நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 342 ஆகும். அதில் எதிர்க் கட்சிகளை சேர்ந்த 160 பேர் முஷாரப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏற்கனவே இராஜினாமா செய்து விட்டனர்.

தேர்தலில் 257 வாக்குகள்தான் பதிவாகியிருந்தன. அதில் முஷாரப்புக்கு ஆதரவாக 252 வாக்குகளும், சட்டத்தரணிகள் சங்க வேட்பாளர் வாஜீகுதீன் அகம துவுக்கு 2 வாக்குகளும் விழுந்தன என தலைமை தேர்தல் ஆணையர் பாரூக் அறிவித்தார்.

பெனாஸிரின் கட்சியினர் வாக்கெடுப்பைப் புறக்கணித்தமையால் அவரது கட்சி வேட்பாளருக்கு ஒரு வாக்குக் கூட விழவில்லை. இதன்மூலம் ஜனாதிபதித் தேர்தலில் முஷாரப் வெற்றி பெற்றுவிட்டார்.

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 22 | செவ்வாய்க்கிழமை 09.10.2007 |
| திதி : திரயோதசி | மு.ப. 7.24 |
| நட்சத்திரம் : | பூரம் காலை 6.43 |
| சுபநேரம் : | 10.32 - 12.02 |
| ராகுகாலம் : | 03.02 - 04.32 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணலாறில் மோதல்

கொழும்பு, ஒக்.8

மணலாறு வடக்குப் பகுதியில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இரு விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று படைத்தரப்பினர் தெரிவித்தனர்.

ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை இருதரப்பினரும் பரஸ்பரம் மேற்கொண்டனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளே முதலில் தாக்குதல் நடத்தினர் என்றும் அவர்களின் தாக்குதலைத் தாங்கள் முறியடித்துவிட்டனர் என்றும் படைத் தரப்பினர் மேலும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவலும் வெளிவரவில்லை. (சி)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பறக்கக்கூடிய தன்மை கொண்ட சுப்பர் சோனிக் விமானங்களைக் கூட துல்லியமாகக் காட்டக்கூடிய தன்மை வாய்ந்தவை'' - என்றார்.

இதேவேளை, அடுத்த வருடம் ஜனவரி மாதம் செக் குடியரசின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொள்ளவிருக்கிறார் என்று அந்த நாட்டு அரசு வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன. (சி)

## பாதுகாப்புச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்தவருடத்துக்கான நிதி ஒதுக்கீடுகளில் ஜனாதிபதியின் வசம் உள்ள அமைச்சுகளுக்கு மொத்த செலவினத்தில் ஐந்தில் ஒரு பகுதி (324.8 பில்லியன் ரூபா) ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நிதித்திட்டமிடல் அமைச்சுக்கு 100 பில்லியன் ரூபா அடுத்த வருடத்துக்கு உத்தேச ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட 51.8 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது இரண்டு மடங்காகும்.

கிழக்குக்கு : 10 பில்லியன்
வடக்குக்கு : 9.8 பில்லியன்

அடுத்த வருடத்துக்குரிய உத்தேச மதிப்பீட்டு அறிக்கையில் கிழக்கு மாகாணத்துக்கு 10 பில்லியன் ரூபாவும் வடக்கு மாகாணத்துக்கு 9.8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன. வடக்குக் கிழக்கு இணைந்திருந்த போது அதற்கு இந்த வருடத்தில் மொத்தம் 17.1 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

அடுத்த வருடத்துக்கான உத்தேச மொத்தச் செலவு 1516 பில்லியன் ரூபாவாகும். இதில் 591.3 பில்லியன் ரூபா செலவீனத்துக்கு அரசு முற்கூட்டியே நாடாளுமன்றின் அங்கீகாரத்தை பெற்றுவிட்டது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அடுத்தமாதம் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். (அ)

## ஆயுதத் தடை முடிவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் உறுதிப்படுத்தும்வரை இலங்கைக்கான படைத்துறை உதவிகளை 690 ஆவது சட்டப் பிரிவின் பிரகாரம் அமெரிக்க அரசு நிறுத்தவேண்டும் என மூதவை கடந்த மாதம் தீர்மானம் கொண்டுவந்திருந்தது.

அமெரிக்காவின் வெளிவிவகாரங்களுக்கான சபையின் தலைவரும் மூதவை உறுப்பினருமான லெகியை சந்தித்த ரோஹித போகொல்லாகம 'செனட்' சபையினால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தை விலக்கிக் கொள்ளுமாறு வலியுறுத்தியிருந்தார்.

எனினும் அவரது முயற்சிகள் தோல்வியைத் தழுவியுள்ளன.

மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கைகளை எடுப்பதாகத் தமக்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்தால் மட்டுமே தாம் அதனை விலக்கமுடியும் என றோஹித போகொல்லாகமவிடம் செனட்டர் லெகி தெரிவித்துள்ளார்.

இதனிடையே 'மிலேனியம் சவால்' திட்டத்துக்கான நிதியைப் பெறும் தகுதியை ஸ்ரீலங்காவிற்குப் பெற்றுக் கொடுக்க அமைச்சர் போகொல்லாகம மேற்கொண்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (சி)

## ஆழ்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''கடற்படையினரின் மூன்று யுத்தக் கப்பல்கள், குறித்த சந்தேகத்துக்கிடமான கப் பலைத் துரத்திச் சென்று தாக்குதல் நடத்தின. இந்தத் தாக்குதலினால் தீப்பிடித்து எரிந்த கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக கடலில் மூழ்கியது'' என்று அவர் மேலும் கூறினார்.

''கடந்த மாதம் அடுத்தடுத்து புலிகளின் மூன்று ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்ட கடற் பகுதியிலேயே நேற்றைய கப்பலும் தாக்கி அழிக்கப்பட்டதாகத் தெரிவித்த அவர், இந்தக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதால் கப்பலில் இருந்த சுமார் 12 முதல் 15 வரையான புலிகள் கொல்லப்பட்டனர். மூவாயிரம் தொன் எடையுள்ள படைத் தளபாடங்கள் இக்கப்பலில் எடுத்துவரப்பட்டிருக்கலாம் என்று கருதுகின்றோம் -என்றும் சொன்னார்.

எனினும் இந்தக் கப்பல் மூழ்கடிப்பு செய்தி தொடர்பாக விடுதலைப் புலிகள் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை. (சி)

## தமிழ் சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டும் கைது செய்யப்பட்டதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார் என்று சிறைச்சாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

கைதிகளின் சுகாதார நிலை, வழக்கு விசாரணையின் தன்மை, தாக்குதலுக்கு உள்ளான விவரங்கள் என்பவற்றைக் கேட்டறிந்தார். அதன் பின்னர் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டு திரும்பினார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 86 பேரும் தமிழர்கள் என்பதால் மொழி பெயர்ப்பதற்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். தாம் வழங்கிய தகவல்கள் மேன்பிரட் நொவக்கிற்கு தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம் என்று கைதிகள் தமது ஆதங்கங்களை வெளியிட்டனர் என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக ஐ.நா. சபையினரோ அல்லது சிறைச்சாலை அதிகாரிகளோ உத்தியோகபூர்வமாக தகவல்களை வெளியிடவில்லை. (சி)

## சமஷ்டித் தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரப்பகிர்வு வழங்கவோ, அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது நிலைப்பாட்டிலிருந்து விலகவோ மாட்டாது.

2002 இல் புலிகளுடன் பேச்சு நடத்தப்பட்டபோது ஆட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி அல்ல, பல கட்சிகள் இணைந்த ஐக்கிய தேசிய முன்னணி.

அந்த முன்னணியின் தீர்மானத்தின் படியே 2002இல் பேச்சுக்கள் நடைபெற்றன.

தமது தனிநாட்டுக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, சமஷ்டியின் ஊடாகத் தீர்வைப்பெற விரும்புகின்றனர் என்று பேச்சுக்கு வந்த புலிகள் கூறினர்.

20 வருடங்களாகத் தனிநாடு கேட்டு யுத்தம் செய்த புலிகள் அத்தனிநாட்டுக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, இறங்கி வருகின்றபோது நாமும் அவர்களுக்கு ஏதாவது நல்லது பண்ணவேண்டும் என்பதால் அவர்கள் முன்வைத்த சமஷ்டியை ஆராய்ந்து பார்க்க - அது பற்றிப் பேச - நாம் இணங்கினோம்.

**சமஷ்டி ஊடான தீர்வை ஒருபோதும் எதிர்பார்க்க வேண்டாம் என்று கூறினோம்**

சமஷ்டி ஊடாக ஏதேனும் தீர்வு முன்வைக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்ப்போம் என்றும் சமஷ்டி ஊடாகத்தான் இறுதித் தீர்வு என்றும், எதிர்பார்க்க வேண்டாம் என்று நாம் அப்போதே கூறியிருந்தோம்.

புலிகளுடன் இடம்பெற்ற அத்தனை பேச்சுக்களின் போதும் இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாக இருந்தோம். ஆனால், சமஷ்டி ஊடாகத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நிலைப் பாட்டிலேயே ஐ.தே. கட்சி இருந்தது என்று கூறப்படுகிறது. அது உண்மையில்லை. எமது நிலைப்பாடு பிழையாக விளங்கப்பட்டுள்ளது.

தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு என்பதுதான் எமது நிலைப்பாடு. அந்த அதிகாரப் பகிர்வில் நாம் விழிப்பாகவுள்ளோம்.

கூடுதலான அதிகாரம் வழங்கப்பட்டு அதனூடாக நாடு பிரிந்துவிடுமோ என்ற அச்சத்தில் சிங்கள மக்கள் உள்ளனர். எப்படிப்பட்ட அதிகாரம் வழங்கப்படப் போகிறது என்று அவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

ஒருபோதும் நாடு இரண்டாகப் பிரியும் வகையில் தேவைக்கு அதிகமான அளவு அதிகாரம் வழங்கப்பட மாட்டாது. அதே வேளை, குறைந்த அளவிலும் வழங்கப்படாது.

மாகாணசபை மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்து அதிகாரப் பகிர்வின் மீதுள்ள எமது உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியிருக்கின்றோம். ஆகவே, அதிகாரப் பகிர்வு தொடர்பான நிலைப்பாட்டில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் பின்வாங்காது - என்றார் லக்ஷ்மன் கிரியெல்ல. (சி)

## புலிச ...ரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலையடுத்து தலைநகர் கொழும்பின் பண்டாரநாயக்க வான் தளம், கொலவலப்பிட்டிய எரிவாயுக் களஞ்சியம் ஆகியவற்றில் உச்சப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோல் உலக வர்த்தக மையத்திலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. (சி)

## வடக்கைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் படையினரின் இழப்பு குறைவானது. விடுதலைப் புலிகள் நாளை வன்னியில் போரிடுவதற்காக இன்று அங்கு விலகியிருந்தனர். அதுதான் தற்போது வன்னியில் நடைபெறுகின்றது. எனினும், ஏன் விடுதலைப் புலிகள் தாக்குதல் சமரை நடத்தவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிளாலி - முகமாலை - நாகர்கோவில் அச்சில் பகுதிகளில் கூட தாக்குதலை மேற்கொள்ள அவர்கள் முயற்சிக்கவில்லை.

இதுவரையில் நடைபெற்ற சமர்களில் படையினர் நிலப்பகுதியை இழக்கவில்லை. கடந்த ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி முகமாலையில் நடைபெற்ற சமரில் படையினருக்கான இழப்புகள் தான் அதிகமாக இருந்தது.

எனவே, தற்போதைய மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் குறைந்த அளவிலான இழப்புகளை சந்திக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால், இந்த வேகத்தில் சென்றால் படையினர் வெற்றி பெறுவதற்கு3 தொடக்கம் 4 வருடங்கள் எடுக்கும். இது விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்த வழிவகுக்கும். படையினர் வெற்றி பெறுவார்கள் என்பதனை நாம் மறுக்கவில்லை. ஆனால், அது மிகவும் மெதுவானது. எனவே, அரசியல் நடவடிக்கை கள் இராணுவ வெற்றிகளைப் புறம்தள்ளி விடலாம்.

அரசியல் நடவடிக்கைகள் என்பன பொருளாதார நிலையை சார்ந்தது. ஆனால், படை நடவடிக்கை நிதி நிலைமை தொடர்பாக பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த வருகின்றது.

எனினும், அரசு மாறினாலும், படைவலு மாற்றத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் புதிய அரசிற்கு அனுகூலமானது. படையினர் கிழக்கை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். பேச்சுக்கள் தொடங்கினாலும் பலத்தின் அடிப்படையில் பேச முடியும்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்குள் இராணுவம் ஊடுருவ முடியாது உள்ள போதும் வான் படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். பதுங்கு குழிகளை ஊடுருவி தகர்க்கும் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)


### மீள் அறிவித்தல்

கரம்பொன் கிழக்கு, சாந்தபாம்பதி
ஸ்ரீ காளிகா புவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தான பரிபாலனசபை, ஊர்காவற்றுறை

மேற்படி தேவஸ்தானத்தில் 17.09.2007 இல் நடைபெற்ற விஷேட பொதுக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை தலைமையில் கலாசார உத்தியோகஸ்தர்கள், ஆலய அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். அக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் அவர்கள் 2005இல் தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபை தொடர்ந்து 2008 திருவிழா முடியும் வரையும் செயல்படும் படி கூறினார். தற்காலிகமாக 31.08.2007இல் தெரிவு செய்யப்பட்ட சபை கலைக்கப்பட்டுவிட்டது எனவும் கூறினார். சபையில் இருந்தவர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டார்கள். இப்பரிபாலன சபையே ஆலயத்தை நடைமுறைப்படுத்தும் என்பதையும் ஆலயம் தொடர்பான சகல செயற்பாட்டிற்கும் இந்த நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு சகல அங்கத்தவர்களுக்கும், உபயகாரர்களுக்கும், பொதுமக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

வி.ஆனந்ததாசன் — தலைவர்
செ.ருத்திரசீலன் — பொருளாளர்
வீ.ஸ்ரீனிவாசன் — செயலாளர்
(86680/4)

A/L Day Class
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு : பாலகுமன்
வணிகக் கல்வி : யசோ
பொருளியல் : P.S.குமார்
★ தனிப்பட்ட கவனம்
★ வாரத்தில் 15 மணித்தியால வகுப்புகள்
★ Paper Class ⇒ 1984 - 2007 வரை
★ பாடம் மாறிப் படிப்பவர்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்படும்.
ஆரம்பம் 10.10.2007 ⇒ 8.30 am புதன்
BEACON யாழ்.நகர்.
Propritor: Poobalasingam

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தின் விசேட கணனிப் பயிற்சித் திட்டம்.
MCS Supported By UNDP/JRRP
பதிவுகள் 19-10-2007 முன் நேரில்
324, பலாலிவீதி, யாழ்ப்பாணம்

தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
கொழும்பு பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்பு
விஞ்ஞானமாணி-தகவல் தொழில்நுட்பம்
2007இல் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும், முன்பு விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கும் அரிய சந்தர்ப்பம்
Diploma in IT >> Higher Diploma in IT >> Degree in IT
BIT கற்கைகளை பயிலும் எமது மாணவர்களுக்கு MGP, MCSE, MCSA 50% சலுகை.
"A" கற்கை நெறிக்கு 100% சலுகை.
MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

IIS
Computer Courses
அனேக மாணவரின் எதிர்பார்ப்புக்கு அமைய
அனைத்து Diploma கற்கைநெறிகளுக்குமான 5ஆவது புதிய பிரிவு ஆரம்பம்.
14/10/2007 பகல் 10.00 மணி
இயக்குநர், IIS,
இல.100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

சர்வதேச லயன்ஸ் கழக இலங்கைக் கிளையின் (306)
பொன்விழா நிகழ்வு காலம்: 20.10.2007; நேரம்: காலை 10 மணி; இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்.
பிரதமவிருந்தினர்:- ஆளுனர் மேதகு லயன் செ.ராகவன் MJF,JP அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
"சேவை தெய்வீகமானது" வடபிராந்திய லயன்ஸ் கழகங்கள். (சி-53382) SERVICE IS DIVINE


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org